ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 83 — 1973 ඔක්තෝබර් 26 වැනි සිකුරාදා — 1973.10.26

83 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II அ) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் ... ... ... | 1131 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் ... | 1136 |

## பதவிகள் — வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத் தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

1 : 1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். "இலங்கையர்" என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1 : 2 ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்கு மிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்கள வராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

1 : 3 விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிரூபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

2 : 1 அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

2 : 2 மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

### முக்கிய அறிவித்தல்

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக் கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத் திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

**3. சேவை நிபந்தனைகள் : பொது**

3 : 1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள், ஆகியவற்றுடன் அரசாங்கத்திஞல் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

3 : 2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

3 : 3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்**

4 : 1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

4 : 1 : 1 சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

4 : 1 : 2 அரசாங்க சேவையில் "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனிமேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

4 : 1 : 3 சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகூர் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

4 : 1 : 4 தகுதிகூர் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறிஞல் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறிஞல் நிறுத்தமாக மாற்றப்படும், அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

4 : 1 : 5 தகுதிகூர் நிலைக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

4 : 1 : 6 சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப்படமாட்டா.

4 : 1 : 7 அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேருெரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

4 : 1 : 8 தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**5. நியமன நியதிகள்**

5 : 1 அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாயினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாயினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பிஞல்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆஞல் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

5 : 2 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவர். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

**6. யுத்த சேவைச் சலுகை**

6 : 1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது

விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

**7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

7 : 1 எல்லாத் தகைமைகளேயும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

7 : 2 வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

7 : 3 ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

7 : 4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

7 : 5 விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை**

8 : 1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும்; அதில், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

**கல்வி அமைச்சு**

*சித்திரப் பரிசோதகர் பதவிகள்*

கல்வி அமைச்சின் கீழுள்ள சித்திரப் பரிசோதகர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு "செயலாளர், கல்வி அமைச்சு (பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2" என்ற முகவரிக்கு 1973.11.20 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியனவாகப் பதிவுஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுப்பக்க மேல் மூலையில் "சித்திரப் பரிசோதகர் பதவிகள்" எனத் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**— இப்பதவிகள் நிரந்தரமானவை. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், அரசாங்கத்தின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை எற்கனவே வகிக்காவிடின் அரசாங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஒருவர், நியமனத் திகதியன்று அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் உபகாரச் சம்பள உரித்துடைய பதவியை வகிப்பவராயின் அவர்கள் தொடர்ந்து உபகாரச் சம்பள உரித்து அந்தஸ்தை அனுபவிப்பார்கள். தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் எற்கனவே அரசாங்க சேவையில் இல்லாவிடின், முதற்கண், மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார்கள். அரசாங்க சேவையிலுள்ள நிரந்தரமான, உபகாரச் சம்பள உரித்துடைய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்படின் அவருடைய நியமனம் ஒரு வருட காலத்துக்குப் பதிற்கடமை முறையில் அமையும்.

3. **சம்பள அளவுத் திட்டம்.**— இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு : ரூபா 4,296—16/144—6,600. வருடாந்தச் சம்பளம் ரூ. 5,304 க்கு முன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு. (முந்திய அனுமானச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 1,980—16/120—3,900 ஆகும்)

4. **தேவைப்படும் தகைமைகள்.**— அபேட்சகர்கள்— (i) சிறந்த ஒழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ii) 1973.11.20 அன்று 23 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும் (எற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமையாது)

(iii) **கல்வித் தகைமைகள்**— (அ) கல்வித் திணைக்களத்தால் வழங்கப்படும் வரைதல் ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும், அல்லது அரசினர் நுண்கலைக் கல்லூரியில் (அரசினர் கலை, கலைப்பணிக் கல்லூரியில்) நடைபெறும் சித்திரத்திலும் ஓவியத்திலுமான பயிற்சி நெறியைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் ; **அல்லது**

அரசினர் நுண்கலைக் கல்லூரியில் (அரசினர் கலை, கலைப்பணிக்கல்லூரியில்) நடைபெறும் சித்திரத்திலும் ஓவியத்திலுமான உயர்தரப்பயிற்சி நெறியைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் அல்லது சாந்திநிகேதன் விஸ்வ பாரதி கலாநிலையத்தால் நடாத்தப்படும் சித்திரத்திலும் ஓவியத்திலுமான நாலுவருட பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் வழங்கப்படும் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

இதனுடன்

(ஆ) சிங்கள மொழியில் அல்லது இலக்கியத்தில் சித்தியுடன் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும் அல்லது சமனான பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும் ;

**அல்லது**

இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி சிங்கள மொழி, கணிதம்/எண்கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(இ) சித்திரத்தில் குறைந்தபட்சம் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில் அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்தின் பொருட்டு வழங்கப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

(ஆ) மேலே 4 (iii) ஆம் உப பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளுக்கும் ஏனைய தகைமைகளுக்குமான சான்றிதழ்கள்.

(இ) இரு குணச் சான்றிதழ்கள் (இவற்றுள் ஒன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியர் வழங்கியதாய் இருக்க வேண்டும்).

(ஈ) சித்திரம் கற்பித்தலில் பெற்றுள்ள அனுபவத்தை நிரூபித்தற்கு வேண்டிய சாதனங்கள்

**குறிப்பு** :—(i) சாதனங்களேனும் சாதனங்களின் பிரதிகளேனும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தனுப்பப்படலாகா.

(ii) வேண்டப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். மேலே விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப்பின் பெற்றுக் கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும், அது விதிக்கப்பட்ட திகதிக்கு முன் உரிய திணைக்களத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டு அதனை ஏற்றுக் கொள்ளுமாறு அவர் தகுந்த காரணங்கள் காட்டி சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7. விண்ணப்பங்களேனும் அவை தொடர்பான யாதேனும் கடிதங்களேனும் கல்வி அமைச்சின் செயலாளரின் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டுமேயன்றி இவ்வமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரின் சொந்த முகவரிக்கும் அனுப்பப்படலாகா.

8. இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதி (IIஅ) ஆம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும்.

பி. உடகம,
கல்வி அமைச்சின் செயலாளர்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.
1973.10.10

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

சித்திரப் பரிசோதகர் பதவி

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) : திரு./திருமதி/செல்வி:————.

2. முழுப்பெயர் :————.

3. உத்தியோக முகவரி : ————.

4. சொந்த முகவரி :————.

5. (அ) இலங்கையரா ? :————.
   (ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா ? :————.

6. பிறந்த திகதி : வருடம் :————. மாதம் :———— நாள் :————.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ள படி சரியானவயது : வரு:————, மா:————, நா :————.

8. தற்போதய பதவி பற்றிய விபரங்கள்:
   (அ) பதவி :————.
   (ஆ) நிரந்தரமா தற்காலிகமா :————.
   (இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா ?
   (ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ? :————.
   (உ) திணைக்களம் :————.
   (ஊ) நிலையம்/வேலை இடம் :————.
   (எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் :————.
   (ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதய படி :————.

9. கல்வி கற்ற பாடசாலைகளும் நிலையங்களும் (கிரமப்படி குறிப்பிடவும்):
   பாடசாலை/நிலையம் தொடக்கம் வரை

10. கல்வித் தகைமைகள் :
   தராதரப் பத்திரம் வருடம் பாடங்கள்

11. ஏனைய தகைமைகள் :
   தராதரப் பத்திரம் வடம் பாடங்கள்

12. சித்திரம் கற்பித்தலில் பெற்றுள்ள அனுபவம் :
   பாடசாலை/நிலையம் தொடக்கம் வரை சேவைக்காலம் விலகியற்கான காரணம்

13. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா ? : (அங்ஙனமாயின் விபரங்களைக் கொடுக்கவும்)————.

14. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா ? (அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்): ————

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக்காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

திகதி :————. ————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

10–802—26.10.73 ந திகதிய வர்த்தமானி இல. 83

---

எண் : பொ. நி. 7/98.

**கல்வி அமைச்சு**

பல்தொழில்நுட்ப நிலையங்களில் கணிதத்திலான விரிவுரையாளர் II ஆந் தர பதவி

கல்வி அமைச்சின் கீழுள்ள பல்தொழில்நுட்ப நிலையங்களில் கணிதத்திலான விரிவுரையாளர், II ஆந் தர பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, "செயலாளர், கல்வி அமைச்சு (பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாகப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பல்தொழில்நுட்ப நிலையங்களில் கணிதத்திலான விரிவுரையாளர், II ஆந் தர பதவி" என அடையாளமிடப்பட வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிகள் நிரந்தரமானவை. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் வகிக்காவிடின் அ. சே. சே. நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனத்தின்போது அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை வகிப்பின் உபகாரச் சம்பள உரித்தை அவர் தொடர்ந்து அனுபவிப்பார். தெரிவு செய்யப்படும் அபேட்சகர், ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாவிடின், முதற்கண் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார். நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவி ஒன்றினை அரசாங்கத்தின் கீழ் வகிக்கும் ஒருவர் தெரிவு செய்யப்படின் ஒரு வருட காலத்துக்கு அவர் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

**3. சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் வருமாறு: ரூ. 6,720—12×360—ரூ. 11,040.

(குறிப்பு .—1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 4,080—12×360—8,400 ஆகும்).

**4. தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகள் பெற்றுள்ளாரெனத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :

(அ) சிறந்த ஒழுக்கமும் உடல்நலமும் உடையவராக இருக்க வேண்டும்.

(ஆ) 15.11.1973 அன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(இ) கணிதத்தை ஒரு பாடமாகக் கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்;

அல்லது

சமமான அல்லது உயர்ந்த தகைமை பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிங்களத்தைப் போதனமொழியாகக் கொண்ட ஒரு பல்தொழில்நுட்ப நிலையப் பதவிக்கு விண்ணப்பிப்பவர் சிங்களத்திலும், தமிழைப் போதனமொழியாகக் கொண்ட அத்தகு நிலையமொன்றின் பதவிக்கு விண்ணப்பிப்பவர் தமிழிலும் சிறந்த நடைமுறை அறிவு பெற்றிருக்க வேண்டும். மொழித் தேர்ச்சியற்ற விண்ணப்பதாரிகள் தமது நியமனத் தேதியிலிருந்து 3 வருடத்துள் விதிக்கப்படும் ஒரு மட்டத்திற்கு (விடயத்திற்கேற்றவாறு) சிங்கள அல்லது தமிழ் தேர்ச்சியைப் பெறல் வேண்டும்.

**குறிப்பு :** வேண்டிய தகைமைகளைப் பெற்றுள்ளவர்களும் கல்வி அமைச்சினுள்ள தொழில்நுட்ப நிலையங்களில் ஏற்கனவே சேவையிலுள்ளவர்களுமான விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் ஏவற்றையேனும், எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச் சான்றிதழ்கள் இரண்டு : இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில்நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு :** 1. சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது.

2. சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப்பின் பெற்றுக் கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும், அது விதிக்கப்பட்ட திகதிக்கு முன் உரிய திணைக்களத் தலைவரால் பெற்றிருக்கப்பட்டு, தாமதத்துக்குப் போதிய காரணம் காட்டி அதனை ஏற்றுக் கொள்ளுமாறு திணைக்களத் தலைவரால் சிபார்சு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. எனினும், விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றினை இவ்வமைச்சுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன் அனுப்ப வேண்டும்.

7. விண்ணப்பங்களேனும் விண்ணப்பங்கள் சம்பந்தமான கடிதங்களேனும் கல்வி அமைச்சின் செயலாளருடைய விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும் ; இவ்வமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரினதும் பெயருக்கும் இவை **அனுப்பப்படலாகா.**

8. இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதி, II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளவையும் அரசாங்க சேவையிலுள்ளபதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படும்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 16 ந் வ.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட வேண்டியது)

**கல்வி அமைச்சின் கீழுள்ள பல் தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் கணிதத்திலான விரிவுரையாளர், II ஆந் தர பதவிகள்**

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) : திரு/திருமதி/செல்வி :———

2. முழுப்பெயர் : ————.

3. உத்தியோக முகவரி : ————.

4. சொந்த முகவரி : ————.

5. (அ) இலங்கையரா ? :————.
(ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா : ————. பதிவு காரணமாகவா ? :————.

6. பிறந்த திகதி : வருடம் : ———— மாதம் : ————.நாள் : ————

7. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது : வரு :——— மா :———நா :———

8. தற்போதைய பதவி பற்றிய விபரங்கள் :—
(அ) பதவி : ————.
(ஆ) நிரந்தரமா தற்காலிகமா ? :————.
(இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா ? :————.
(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ? :————.
(உ) திணைக்களம் :————.
(ஊ) நிலையம்/வேலை இடம் : ————.
(எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் :————
(ஏ) திரட்டிய வருடாந்தா சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதைய படி :—

9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் (சிங்களத்தில் பெற்றுள்ள தேர்ச்சி/தமிழில் பெற்றுள்ள தராதரப் பத்திர விபரங்கள் உட்பட) :———.

| பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

10. உயர்தொழில் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| தராதரப் பத்திரம் | வழங்கியவர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |

12. உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபடவேண்டியது :—

| திணைக்களம் | நிலையம்/வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா ? :————
(அங்ஙனமாயின் விபரங்களைக் கொடுக்கவும்)

15. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா ? ————.
(அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு ? :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதகு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்களிக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

10–841—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83.

---

**சிறு கைத்தொழிற்றிணைக்களம்**

கைப்பணிப்பொருள் வடிவ அமைப்பாளர் பதவி

*1973 ஒற்றோபர் 12 ந் தேதி வெள்ளிக்கிழமை வெளியான இலங்கைக் குடியரசு வர்த்தமானி இலக்கம் 81 ற் காணப்படும் மேற்படி பதவிக்குரிய அறிவித்தலின் 4 ம் பந்தியிற் கீழ்க் காணும் வாசகம் சேர்க்கப்பட வேண்டுமென்பதைத் தயவு செய்து கவனிக்கவும் :—*

*“திணைக்களத்தைச் சேர்ந்த, பத்து வருடங்களுக்கு மேற்பட்ட சேவையினையுடைய செய்முறை காட்டுநர்—மேற்பார்வையாளர் போன்ற தொழினுட்ப உத்தியோகத்தர்கட்குக் கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியெய்தியுள்ளமை போதுமானது.”*

ஜி. பி. ஹத்தொட்டுவ,
பிரதிப் பணிப்பாளர் (முகாமை),
சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்காக.

சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ்கட்டிடம்,
கொழும்பு 1,
1973 ஒற்றோபர், 17.

10–916—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83.

---

**மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி பகுதியின் பிறப்பு, இறப்புப் பதிவாளருக்கான பதவி**

*மேற்கூறப்பட்ட பதவிக்கு ஓட்டமாவடி பிறப்பு, இறப்புப் பதிவுப் பகுதிக்குள் நிரந்தரமாக வசிக்கும் ஆண், பெண் இருபாலரிடம் அல்லது அவ்விடத்தை வாசஸ்தலமாகக் கொண்டு அவ்விடம் குடியேறி, அப்பகுதிக்குள் போதிய நலனும் செல்வாக்குமுடைய நபர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் முடிவடையும் தினத்தன்று விண்ணப்பகாரர்கள் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவிருத்தல் வேண்டும். ஏற்கனவே, நிரந்தர அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமைவுறாது.*

*2. கல்வி, தகைமை சம்பந்தமான மேலதிக விபரங்களை இக் காரியாலயத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து அல்லது அப்பகுதிக்குள் இருக்கும் பொது இடங்கள், அலுவலகங்கள் அதாவது, பகுதி அரசிறை உத்தியோகத்தரின் அலுவலகம், கிராம சேவையாளரின் அலுவலகம், உள்ளூராட்சிச் சபையினரின் அலுவலகங்கள், கிராமக் கோடுகள், அஞ்சல் அலுவலகங்கள் பொலிசு நிலையங்கள், சன சமூக நிலையங்கள், பொதுச் சந்தைகள், கூட்டுறவுச் சங்கக் கடைகள் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.*

*3. இவ்வலுவலகத்திலிருந்து பெறக்கூடிய விதித்த படிவத்தில் எல்லா விண்ணப்பங்களையும் தயாரித்து, 30.11.1973 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்பவேண்டும்.*

*ஆர். பீ. வீரக்கோன்,
மாவட்டப் பதிவாளர்.*

*மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1973 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ந் திகதி.*

10–920—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83.

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**அரசகரும மொழித் திணைக்களம்**

சிங்களச் சுருக்கெழுத்தாளர் பயிற்சி வகுப்புகள்

அரசகரும மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படவிருக்கும் மேற்படி பயிற்சி வகுப்புகளிற் சேர்வதற்குத் தகைமையுடைய ஆண், பெண் ஆகிய இருபாலரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த வகுப்புகள் ஏறத்தாழ ஓராண்டு காலம் தொடர்ந்து நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது ; வகுப்புகள் கொழும்பில் அலுவலக நேரங்களில் நடைபெறும். ஏறத்தாழ 40 பயிற்சியாளருக்கு இடமுண்டு.

2. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குச் சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) இலங்கையராயிருத்தல் வேண்டும் (பரம்பரை வழியாக அல்லது பதிவுபெற்று இலங்கைப் பிரசையானவரே இலங்கையர் எனப்படுவர்)

(ஆ) (i) இலங்கைச் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் ; சிங்களத்திலும், எண்கணிதம், ஆரம்ப கணிதம், வர்த்தக கணிதம் ஆகியவற்றுள் ஒன்றும் உட்பட நான்கு பாடங்களில் திறமைத் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(ii) கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ் (சாதாரண தரம்) பெற்றிருத்தல் வேண்டும் ; ஆறு பாடங்களில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் சிங்களத்திலும், எண்கணிதம், தூயகணிதம், ஆரம்ப கணிதம், வர்த்தக கணிதம் ஆகியவற்றுள் ஒரு பாடம் உட்பட நான்கு பாடங்களில் திறமைத் தேர்ச்சியடைந்திருப்பதுடன் ஒரே முறையில் குறைந்தது ஐந்து பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) 1973.11.20 அன்று 17 வயதுக்குக் குறையாதவராயும் 22 வயதுக்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும்.

(ஈ) சிறந்த நற்குணமுடையவராயும் உடல்நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பகாரர் கொழும்பில் நடைபெறவிருக்கும் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு அல்லது சோதனைக்குச் சமுகமளித்தல் வேண்டும். அவற்றிற்காகிய காலமும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும். பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா. விண்ணப்பத்திலுள்ள விபரங்களில் ஏதுவாயினும் பிழையாகவிருப்பது தெரிவுக்குமுன் காணப்படின் விண்ணப்பகாரர் தெரிவுக்குரிய தன் தகைமைகளை இழப்பர். தெரிவு செய்யப்பட்ட பின் கண்டுபிடிக்கப்படின் அவர் வகுப்பிலிருந்து நிறுத்தப்படுவதற்கு ஆளாவர்.

4. பயிற்சிக் காலத்தில் எவ்வகைப் படியாயினும் கொடுக்கப்பட மாட்டாது. பயிற்சி முடிந்ததும் இந்தத் திணைக்களத்திலோ, அரசாங்க சேவையிலோ தற்காலிகமாகவேனும், நிரந்தரமாகவேனும் வேலை கொடுக்கப்படுமென உத்தரவாதமளிக்க முடியாது.

5. பயிற்சிக் காலத்தில் காலத்துக்குக் காலம் சோதனைகள் நடத்தப்படும் ; அச்சோதனைகளின் பெறுபேறுகளின்படியே பயிற்சியாளர் தொடர்ந்து பயிற்சிபெற அனுமதிக்கப்படுவர். எப்பயிற்சியாளரினதும் வரவு, படிப்பு, பொதுத் தகுதி அல்லது நடத்தையில் இத்திணைக்களத்திற்குத் திருப்தியேற்படாவிடின் அன்னார் பயிற்சிக் காலத்தில் எந்நேரத்திலாயினும் உடனடியாக நீக்கப்படுவதற்கு ஆளாவர். அவ்வாறு நீக்கப்பட்ட பயிற்சியாளர் எவராயினும் பின்னர் வரும் பயிற்சி வகுப்புகளிற் சேர்வதற்குத் தகவுடையராகார். காலத்துக்குக் காலம் பிறப்பிக்கப்படும் பிரமாணங்கள், அறிவுறுத்துரைகள் ஆகியவற்றிற்கு அமைந்து நடப்பதாக ஒரு உடன்படிக்கை, அதற்கெனவுள்ள ஒரு படிவத்தில் எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுக்குமாறு ஒவ்வொரு பயிற்சியாளரும் வேண்டப்படுவர்.

6. பயிற்சியின் முடிவில் தகுதியைத் தீர்மானிக்கும் பரீட்சையொன்றும் அதன் பின்னர், இறுதிப்பரீட்சையும் நடைபெறும். சுருக்கெழுத்து, தட்டெழுத்து, சிங்களமொழி என்னும் விடயங்களைக் கொண்ட இந்தப் பரீட்சையில் தேர்ச்சியடைந்தால் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

7. பயிற்சியாளர் வேண்டுமென்று அசட்டை செய்தல், கவனமில்லாதிருத்தல் ஆகியவற்றின் விளைவாகக் களஞ்சியப் பொருள்கள் காணுமற் போவதாலும் உபகரணங்கள் முதலியன சேதமடைவதாலுமேற்படும் நட்டத்தை ஈடுசெய்வதன் பொருட்டு ஒவ்வொரு பயிற்சியாளரும் வகுப்பிற் சேரும்போது, ரூபா 100 பிணை, இரண்டு பிணைக்காரர் மூலம் செலுத்தல் வேண்டும்.

8. இவ்வகுப்புகளிற் சேர்வதற்காகிய விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பக்காரரின் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டு ஆணையாளர், அரசகரும மொழி அலுவல்கள், த. பெ. 598, கொழும்பு 7 என முகவரியிட்டு 20.11.1973 அன்று அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஆணையாளரின் பெயருக்கு அனுப்பக் கூடாது.

பீற்றர் பி. அபயசேகரா,
ஆணையாளர்,
அரசகரும மொழி அலுவல்கள்.

அரசகரும மொழித் திணைக்களம்,
22, நீட் வழி,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 17 ந் திகதி

### சிங்களச் சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்பு

சேர்வதற்காகிய விண்ணப்பம்

1. முழுப்பெயர் :————.
(தெளிவாக எழுதுக)
2. முகவரி :————.
3. தேசிய இனம் :————.
(பரம்பரையானஇலங்கையரா அல்லது பதிவுபெற்ற இலங்கையரா வென்பதைக் குறிப்பிடுக)
4. 1973.11.20 அன்று வயதும் பிறந்த திகதியும் :————.
(பிறப்புச் சான்றிதழ் (ஒரு படி மாத்திரம்) இணைக்கப்படுதல் வேண்டும்).
5. ஆண்/பெண் :————.
6. மணமானவர்/மணமாகாதவர் :————.
7. சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சையும், பாடங்களும், திகதிகளுடன் :————.
8. இலங்கைச் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ்ப் பரீட்சை அல்லது கல்விப் பொதுத் தாரதரச் சான்றிதழ் (சாதாரண தரம்) பரீட்சையில் திறமைத் தேர்ச்சியும் சாதாரணத் தேர்ச்சியும் பெற்ற பாடங்கள் (படிகளை இணைக்க ; மூலங்களையல்ல. இன்னும் சான்றிதழ்கள் கிடைக்காவிட்டால் அவ்வாறு குறிப்பிடும் அதிபரின்/தலைமை ஆசிரியரின் சான்றிதழ் அல்லது வேறு செல்லுபடியான சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்) :————.
9. கல்வி கற்ற இடமும் தேதியும் :————.
10. சிங்களத்திற் பெற்ற விசேட தகைமைகள் உண்டாயின் அவை :————.
11. சிங்கள/தமிழ்/ஆங்கில சுருக்கெழுத்திற், தட்டெழுத்திற் பெற்றுள்ள அனுபவம் :————.
12. இப்பொழுது ஏதாவது தொழில் செய்வதாயின் அத் தொழில் :————.
13. பெற்றோர்/பாதுகாவலர் பெயரும் முகவரியும் :————.
14. இரு நடுவரின் பெயர்களும் பதவிப் பெயர்களும் :————.
15. குணச் சான்றிதழ் வழங்கியவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் (படிகள் மாத்திரம்) இணைக்கப்படுதல் வேண்டும் ; ஒரு சான்றிதழ் கடைசியாகப் படித்த பாடசாலைத் தலைமை ஆசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் (மூன்று சான்றிதழ்கள்) :————.
16. வேறு தகைமைகள் உண்டாயின், அவை :————.

————
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

10–919—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83.

---

### அம்பாறை ஹாடி சிரேட்ட தொழிநுட்ப நிலையத்தில் நடைபெறும் விவசாயத்திலான மூன்று வருட தேசிய தொழில்நுட்பவியல் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்தல்—கழகவாண்டு, 1974

அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தில் நடைபெறும் விவசாயத்திலான மூன்றுவருட முழுநேர தேசிய தொழில்நுட்பவியல் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிக்கு (இரண்டு வருடங்கள் நிலையத்திலான கழகப் பயிற்சியும் மூன்றும் வருடம் விவசாய தாபனங்களில் இணைக்கப்பட்டு பொறிமுறைப் பயிற்சியும்) மாணவர்களைச் சேர்த்தற்பொருட்டு தகுதிபெற்ற ஆண் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகவுத்திறன்.—**

(அ) **வயது.**—அபேட்சகர்கள் 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆந் திகதியன்று 16 வயதுக்கு மேற்பட்டவராய் இருக்க வேண்டும்.

(ஆ) **கல்வித் தகைமைகள்.**—அபேட்சகர்கள் தூய கணிதம், இரசாயனவியல், ஒரு மொழி ஆகியவை உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. (சா. த) பத்திரப் பரீட்சையில் ஒரே தோற்றத்தில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் பின்வரும் தொகுதிப் பாடங்களில் குறைந்தபட்சம் இரண்டு பாடங்கள் உட்பட மூன்று பாடங்களில் அதே தோற்றத்தில் திறமைச் சித்திகள் பெற்றிருக்க வேண்டும்.—

(1) தூயகணிதம்
(2) பௌதிகவியல்
(3) இரசாயனவியல்
(4) உயிரியல்
(5) விவசாயம்
(6) புவியியல்

மு. கு.—விவசாயத்தில் சித்தி பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட வேண்டும். சகல விண்ணப்பங்களும் அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையப் பதிவாளருக்கு 26.11.1973 அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாகப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

மேலே 2(ஆ) ஆம் பந்தியில் கீழ் கொடுபட்டுள்ள தொகுதிப் பாடங்களிலும் நேர்முகப் பரீட்சையிலும் விண்ணப்பதாரிகள் பெறும் தேர்ச்சி அடிப்படையில் மாணவர்களின் தெரிவு நடைபெறும்.

ரீ. ஓ. பி. பர்னாந்து,
கல்வி பணிப்பாளர் (தொழில்நுட்பக்கல்வி)
கல்வி மா அதிபதிக்காக.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.
1973-10-16

மாதிரி விண்ணப்பப் படிவம்

**அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தில் நடைபெறும் விவசாயத்திலான மூன்று வருடத் தேசிய தொழில்நுட்பவியல் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிக்கு மாணவர்களை 1974 ஆம் கழகவாண்டிற் சேர்த்தற்கு அனுமதிகோரும் விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (தெளிவாக எழுதவும்) :————.
2. அஞ்சல் முகவரி :————.
3. பிறந்த திகதி :————.
   (விண்ணப்பதாரியின் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி—மூலப்படியல்ல—இணைக்கப்பட வேண்டும்)
4. 1.1.1974 அன்றுள்ளபடி வயது :————. வரு :————. மா. ————. நாள் ————.
5. நாட்டினம் :————.
6. (அ) அறிவித்தலின் 2(ஆ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேறுகளைப் பெற்ற க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சை வருடம், மாதம், சுட்டிலக்கம் :—
   வருடம் :————. மாதம் :————. சுட்டிலக்கம் :————
   (ஆ) சித்தி எய்திய பாடங்களும் பெற்ற தேர்ச்சியும் : (சாதாரண சித்தி, திறமைச் சித்தி, விசேட சித்தி ஆகியன)

| பாடங்கள் | தேர்ச்சி |
|---|---|

7. பெற்றோரின்/பாதுகாவலரின் பெயரும் முகவரியும் :————

————,
**விண்ணப்பதாரியின் ஒப்பம்.**

திகதி :————.

10-886—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83

---

**பொது எழுதுவினைஞர் 2 ம் வகுப்பின் "அ" பிரிவிற்கு நியமிப்பதற்காய பரீட்சை—நவம்பர், 1972**

மேற்குறித்த பரீட்சைக்குத் தோன்றிய அரசாங்க அச்சுத்திணைக்கள எழுதுநர் 2 ம் வகுப்பின் "ஆ" பிரிவைச் சேர்ந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் அதே சேவையின் 2 ம் வகுப்பின் "அ" பிரிவிற்கு, தகவுத்திறன் செவ்வை பார்க்கப்படுதற்குட்பட்டு, நியமனம் பெறுதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நிட்ஸ்வே திலகரத்ன,
**தகவல் ஒலிபரப்பு**
அமைச்சின் செயலாளர்.

7, சேர் பாரன் ஜயதிலக மாவத்தை,
கொழும்பு 1,
1973 அக்டோபர் 16.

| பெயர் | சுட்டெண் ஏபி |
|---|---|
| பெர்னான்டோ, பி. ஏ. ஜே. | 2 |
| பெரேரா, ஜீ. எம். எஸ். | 6 |
| சபாநாயகம், க. | 8 |
| திரிமான்ன, உ. | 12 |
| சமரக்கோன், டபிள்யு. ஏ. டீ. ஏ. | 9 |

10-909—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் | 5.10.73 | வெள்ளி | 25.9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 12.10.73 | வெள்ளி | 3.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 19.10.73 | வெள்ளி | 10.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 26.10.73 | வெள்ளி | 17.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| நவெம்பர் | 2.11.73 | வெள்ளி | 24.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 9.11.73 | வெள்ளி | 31.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 16.11.73 | வெள்ளி | 7.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 23.11.73 | வெள்ளி | 14.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 30.11.73 | வெள்ளி | 21.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| திசெம்பர் | 7.12.73 | வெள்ளி | 28.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 5.12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 12.12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 19.12.73 | புதன் | ந.ப. 12 00 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆடு ஓகத்து மீ 18 ந் வ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.